

Vol.21 | No. 8 | August 2017

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Jubilee Greetings



Sr. Concelia Manthara SH (Golden Jubilarian) |
Fr. Thankachan Joseph Kollappalliyil SDB | Fr. Davis Karukapally CMI |
Sr. Joseena FCC | Sr. Ruby Jose CMC | Sr. Ansa Joseph SJSM |
Sr. Jessy Therese CMC | Sr. Alphonse Linet CMC | Sr. Anija CMC |
Sr. Daisy Therese SJSM | Sr. Daise Maria CMC




CATECHISM ANNIVERSARY - JULY 01



PALAPALLAM PASTORAL VISIT



KAZHUVANTHITTAI CHURCH CONSTRUCTION RESUMED - JULY 03

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 8 August 2017

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| அருட்பணிப் பேரவை | 08 |
| நற்செய்தி நிலையம் | 11 |
| Birthdays & Feast days | 12 |
| இளைஞர் இயக்கம் | 13 |
| அருட்சகோதரர்களிடமிருந்து.. | 14 |
| இல்வாழ்வு இயக்கம் | 15 |
| சமூக சேவை சங்கம் | 16 |
| வின்செண்ட் தே பவுல் | 18 |
| வெள்ளிவிழா, பொன்விழா | 19 |
| மறைமாவட்டச் செய்திகள் | 23 |
| மறைவட்டச் செய்திகள் | 25 |
| Bishop's Engagements | 28 |



## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**



Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/72/2017

Dear and Reverend Fathers, 31 July 2017

Greetings from Bishop's House, Thuckalay!

Pope Francis, on the occasion of his Christmas message for the Roman Curia in 2014, spoke about some of the diseases that can cripple the effectiveness of ministry among pastors. He is of the opinion that in the life of a priest a constant examination of conscience would help him to be focused in his task. It had been the practice of the Desert Fathers who did it with the help of a prepared list, in order to prepare properly for the sacrament of Reconciliation. As Pope points out, a healing comes about through the awareness of one's sickness and their personal decision of patiently and perseveringly applying appropriate remedies. Pope Francis mentioned three sets of 5 diseases making fifteen probable diseases and temptations, which weaken the vital, personal, authentic and true relationship that a pastor should have with Christ. The ordering of the diseases is neither chronological nor sequential. In this letter, I am putting forward for your consideration seven of those diseases that Pope Francis mentioned.

**The first disease is thinking that life of a priest is immortal, immune or indispensable**

Those priests, who think in this way, turn to be lords and masters. They place themselves above others and not at their service. It is an effect of the pathology of power, from a superiority complex.

A priest may come from poor economic background or have poor intellectual capacities. In such a case the priest should have a balanced personality emerging from his spirituality that enables him to keep a humility and simplicity of life. He may be in whatever status of life in which he gets the calling of God. But some search for compensation in their status by thinking about themselves as priests in an exaggerated way and this happens to some of them. Sometimes it could be an outcome of a lot of money he has illegally accumulated in his priesthood and tries to show his power of money by lording over people.

It could also be a sheer act of immaturity of a priest who has not taken efforts to grow by having recourse to the Word of God and

prayer to keep a correct profile of his life. He tends to forget that he is above all a servant to all parishioners. The example of the washing of the feet by Christ should touch and transform him.

**Another disease is Martha Complex**

There was a woman called Martha living with her brother Lazarus and her sister Mary. Jesus now and then used to stay in that family. The coming of Jesus to their family was to show that he was ready to listen to their burdens and problems of their lives and to impart the message of good news that would liberate them from several woes. He was there ready to hear in a sympathetic and patient way. Hence he gave them time by being present in their family. Mary understood this and sat down at his feet and poured out her problems especially those pertaining to her earlier life. She was expecting from Jesus the liberating words of God in order to attain her peace of mind and heart as well as to be filled by the grace of God. Jesus appreciated her attitude and her values that she wanted to align herself along with the values of the Kingdom preached by Christ.

But her sister Martha had a different frame of mind. She wanted to give a big treat with several tasty dishes to Jesus. Hence she was too busy on that and even got tired in the course of the work. This made her feel that her sister Mary should have given a helping hand to her in this task and not sit idle with Jesus. This was a misjudgement of Martha on the whole situation. She pointed out to Christ that he should have asked her to help her work in the kitchen, meant to make Jesus happy.

Thus there were two sets of values at work: one set of values was to be busy for Jesus with worldly affairs like preparing a good meal and the second was to be busy with Jesus to reenergize oneself with the spiritual energy given by Christ. Likewise there are priests who busy themselves with several activities in the parish: some traditional works and some undertaken out of their goodwill for the welfare of the parishioners. In this process he is like Martha, busy and easily becomes a prey to fatigue that comes out like complaints by Martha. Jesus clarified that he came to them to have a meal with them you but what is more important is that Jesus wanted to spend his personal time with them talking, dialoguing and offering the life-giving message of God. In his presence at home they should seek the right choice like Mary.

Every priest should realize that he has in his midst in the chapel/church the presence of the Blessed Sacrament where Jesus is personally making himself available to the

priest at whatever time and as long as he requires it. When a priest does not have this value system and practice it he has, as Pope says, Martha-complex, an excessive business mind and fatigue, emerging out of several social and other engagements, a priest undertakes either for himself or for his parishioners. The lacuna in such lives is that the priest does not create a balance and budgeting of time between being busy for people and finding the needed time with Christ in the Eucharist.

We must take a serious note of two instances in the Gospel: (Mk 6:31-32) "Then he said to them 'go off by yourselves to a remote place and have some rest'. For there were so many people coming and going that the apostles had no time to even eat. And they went away in the boat to a secluded area by themselves". Secondly (Mt 11:28-30): "Come to me all who work hard and who carry heavy burdens and I will refresh you. Take my yoke upon you and learn from me for I am gentle and humble of heart and you will find rest. For my yoke is good and my burden is light". The priest who says that his work is his prayer is a typical example of a priest with Martha-complex, personified.

**The third disease is mental and spiritual petrifaction**

Certain priests are filled with zeal after their ordination. But as days go because of their acquisition of wrong values and keeping a distance with Jesus internally they fall a victim to greediness of money that makes them demand money for any service they do forgetting, that a priest is ordained and is maintained for day to day life by the Church. This accumulation of money and increase in greediness manifest themselves by cheating in proper accountability and transparency in financial transactions with regard to the money of the Church and of people. With the accumulation of money there is a temptation to fall a prey to alcoholic drinks and in getting interested in unwanted relationships leading up to sexual misconduct with the other sex. It also leads to group-complex of priests to join with those priests of their vested interest and do mischief in their priestly life.

In short, such a deviation and disease lead to a hardness of heart that abandons the grace of God and the duty to show mercy to the poor and other Christians. These are priests who lose their sentiments of Jesus and people.

**The fourth disease is excessive planning and functionalism**

This is not a very common disease but found easily with those who always desire high posts in the diocese or who actually have responsible positions. Planning and

its diligent execution are important and essential. But, to make it an end by itself, will multiply group activities under any responsibility and have too many meetings to plan. Planning becomes so excessive that it takes away much of the time of execution. When they reach a level of saturation in planning people may abandon it and they become thus disgruntled with people. Instead of blaming such a situation and the attitude of people they should look into themselves whether they have such a disease and get healed from it.

**The fifth disease is poor coordination among several activities**

It develops when the communion between members is lost. The body, then, loses its harmonious functionality and its temperance. It becomes an orchestra of cacophony because the members do not collaborate and do not work with a spirit of communion or as a team.

**The sixth disease is spiritual Alzheimer**

It consists of losing the memory of our personal salvation history, our past history with the Lord and our first love of his call to priesthood. Pope Francis summarizes it saying "We see it in those who have lost the memory of their encounter with the Lord."

This is one of the constant themes insisted by the Pope to priests. Priests are not selected because they are worthy of priesthood but they are selected by God and gradually by His Grace are formed them as His own priests if they cooperate with Jesus like the Apostles, except Judas. Each priest should realize his own history of sins and sometimes serious ones but forgiven by the mercy of God and entered into His embrace. He must also fully accept that if God's grace does not continually enrich him by his daily encounter with Jesus in the Eucharist and in his personal prayer his life would be in shambles. When he loses his memory of his own history of salvation he fails to become an instrument of God to bring a personal transformation in the lives of his parishioners.

The ministry and the life of a priest remain faithful to God and to his ministry among people only if he remembers that as a priest how dependent he was and is in his relationship with Jesus and its deepening and enrichment through his prayer life. Every priest should look into himself to see whether the disease of spiritual Alzheimer is gradually setting into his life or has already set in. The physical Alzheimer disease does not have today much remedies but the disease of spiritual Alzheimer has very effective healing means at our disposal. Unless we know the way out we will not be able to take it.

**The seventh disease is rivalry and vain glory that arises out of titles of honour**

There are different titles of honour in every diocese: The Vicar General, the Procurator, the Chancellor, the Vicar Forane, Director of a Diocesan Centre, Coordinator of Commissions, etc. All these titles of honour are meant for services to priests and to several parishes. When a priest takes away the essential element of service and commitment he keeps holding on only to titles, given to him. It is like honey, taken away from the beehive, and it becomes an empty honeycomb. The honey gatherers will not go after it except to make some commercial use like making wax candle.

When title of honour loses its quality of service and commitment, they become mere titles. In such cases there could be a temptation that the title of honour is loved and esteemed greatly by the person who is given them. The title is loved for itself, as a sign of honour and the person tends to love himself and desires further honours to be given by others because of his title or position of power. Instead of commanding honour they may start demanding it and place oneself in a self-made hierarchy of honours. It tempts one to change his language of love and respect into one of asserting one's power position and domineering tendencies. This sickness directly clashes with the values of Christ who washed the feet of his disciples and admonished them against such temptations and disease. Jn 13:12-15 "Do you understand what I have done to you? You call me Master and Lord, and you are right, for so I am. If I, then, Your Lord and Master, have washed your feet, you also must wash one another's feet. I have given you an example that as I have done, you also may do. Truly I say to you, the servant is not greater than his master, nor is the messenger greater than he who sent him. Understand this, and blessed are you if you put it into practice."

The above-mentioned diseases of Pope Francis are the fruit of his reflection arising from his long years of ministry as priest, as Bishop and as Cardinal. Like a good steward, he has drawn, from the stock of his experiences these reflections to enrich the lives of priests. It shows the deep authentic faith life of Pope as well as his love and concern for his priests. Let us give a thought to them and make a serious reflection on our own life as priests.

**CONCLUSION**

The month of August offers us with a number of feasts not only for celebration but also for our edification. On 4 August we shall celebrate the feast of St John Mary Vianney. He is the patron of all Parish Priests as well as the Diocesan Priests. A poor boy from Dardilly, he was ordained a priest through compassion and was in-charge of an isolated parish. However, it was this man who became a teacher and model even for the Popes who sat on the Chair of Peter, who are inspired by him and hold him up for emulation to the entire Church. All these happened because of the strange logic of God who chooses the little ones to depose the mighty. While wishing you a happy feast to all of you, let us reflect on the priesthood of this humble little saint who changed a town and a world through his life of prayer and simplicity. On 15 August we celebrate the twin festivals of Assumption of our Blessed Mother Mary and the Independence of our beloved motherland. Assumption is an expression of our deep faith because we believe in the real, physical elevation of the sinless soul and incorrupt body our Mother Mary into Heaven. 15 August also commemorates the independence that we obtained from the United Kingdom after years of struggle. On this day, let us pray for the wellbeing of our country and ask Mother Mary to intercede for us so that we become free from every form of bondage and be with her one day in heaven.With my prayers and blessings,

Yours in Christ Jesus,

✞George Rajendran SDB
Bishop of Thuckalay

## வரவிருக்கும் நிகழ்வுகள்

ஆகஸ்ட் 04, 2017 – புனித ஜான் மரிய வியானி தினம்.
முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வைத்து குருக்களுக்கான சிறப்புக் கூட்டம்

ஆகஸ்ட் 11, 2017 – இயக்குநர்களுக்கான கூட்டம்

ஆகஸ்ட் 14, 2017 – குருக்கள் மற்றும் துறவியருக்கான சங்கமம், நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்தில் வைத்து நடைபெறும்.

ஆகஸ்ட் 21 முதல்
செப்டம்பர் 2, 2017 – சீரோ மலபார் ஆயர் பேரவை.

# தமிழ்நாடு — பாண்டிச்சேரி அருட்பணிப்பேரவை 2017—ஆம் ஆண்டையப் பொதுக்குழு கூடுகை அறிக்கை

இடம் : தியான இல்லம், திருத்தலப் பேராலயம், வேளாங்கண்ணி.
நாள் : 2017 ஜூலை 9
மதிப்பிற்குரியீர் !

தமிழ்நாடு பாண்டிச்சேரி அருட்பணிப் பேரவையின் ஆண்டுவிழாக் கூட்டமும் பொதுக்குழுக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து ஆயர் பேரவையும் வேளாங்கண்ணி திருத்தலப் பேராலய தியான இல்லத்தில் ஜூலை 9 - ஆம் நாள் காலை சரியாக 9.00 மணிக்கு சென்னை சாந்தோம் கலைத்தொடர்பு மையத்தினரின் காணொளிக் காட்சியோடு கூடிய செப வழிபாடோடு தொடங்கியது.

முதல் நாளான அருட்பணிப் பேரவைக் கூட்டத்தின் நிகழ்வானது குத்துவிளக்கில் ஒளியேற்றல் மூலமாக தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து துணைத்தலைவர் திரு. பூரணநாதன் அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது. ஆண்டறிக்கை மற்றும் மறைமாவட்ட அருட்பணிப்பேரவைகளின் கடந்த ஆண்டின் செயல்பாடு அறிக்கை ஆகியவற்றை செயலர் அருட்தந்தை சகாய ராஜ் அடிகளார் அவையில் சமர்ப்பித்தார். அது அவை உறுப்பினர் இருவரால் முன்மொழியப்பட்டு அவையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. கடந்தாண்டுக் கூட்டத்தில் ஆயர்கள், பேராயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள் என சுமார் 175 பேர் கலந்து கொண்ட விபரத்தையும் அவர் அவையில் பதிவு செய்தார்.

கோட்டாறு மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றுள்ள ஆயர் மேதகு நசரேன் சூசை ஆண்டகையின் முதல் கூட்டமாகையாலும், கும்பகோணம் ஆயர் மேதகு ஆன்றனிசாமி ஆண்டகையின் ஆயர் அருட்பொழிவு நாள் ஆனதாலும் இருவரையும் ஆயர் பேரவைத் துணைத் தலைவர் மேதகு ஆயர் நீதிநாதன் ஆண்டகை, பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்.

தமிழக அருட்பணிப் பேரவையின் செயல்பாடுகள், தீர்மானங்கள் செயல்படுத்தப்படும் வழிமுறைகள் இன்றையக் காலசூழலில் மாறிவரும் அரசியல் பொருளாதாரச் சூழல்கள், இளையோர்களின் இன்றைய நிலைப்பாடு மற்றும் இளையோரை எவ்வாறு நாம் பயன்படுத்த வேண்டும் என்று திருத்தந்தையின் பார்வையில் தமது தொடக்க உரையில் அருட்பணிப் பேரவையின் தலைவர் ஆயர் மேதகு முனைவர் அந்தோணி பப்புசாமி ஆண்டகை எடுத்துக்கூறி அதிகார

பூர்வமாக பேரவைக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். குறிப்பாக பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தி பதிவு செய்தார்.

1.ஏழ்மையான நாடு
2.ஜனத்தொகை அதிகமான நாடு
3.ஊழல் வாதிகளால் ஆளப்படும் நாடு
4.இந்து அல்லாதவர்களை எதிர்க்கும் மனப்போக்குடைய ஆட்சியாளர்கள் கொண்ட நாடு
5.மேல்தட்டுக் கலாச்சாரத்தின் விளைநிலம்
6.வளர்ச்சி என்னும் போர்வையில் தொடரும் அநியாயங்கள்

இத்தகு காட்சிப்படுத்துதல்கள் மாற வேண்டுமானால் சிந்தனையாளர் ஆல்பிரட் நோபல் கூறியது போல - கிறிஸ்தவ நம்பிக்கை இளையோரிடத்தில் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு அடிப்படையாக அன்பு, ஒழுக்கம், பாசம், கீழ்படிதல், சுயக் கட்டுப்பாடு, நன்னடத்தை, பிறரை மதித்தல், தலைமைப்பண்பு, சுய விமர்சனம், விழிப்புணர்வு என்னும் 10 படிகளால் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றார்.

காலை சுமார் 10.20 மணியளவில் பல்வேறு அமைப்புகளில் உறுப்பினரும் சுமார் 32 வருடங்களுக்கும் மேலாக சட்ட ஆலோசகராகப் பணிபுரிபவருமான வழக்குரைஞர் திரு. மார்ட்டின் அவர்களின் கருத்துரை இடம் பெற்றது.

**தலைப்பு :** மாறிவரும் இன்றைய அரசியல், சமய, கலாச்சார, பொருளாதாரச் சூழலில் கத்தோலிக்க இளைஞர்களுக்கும், குடும்பங்களுக்கும் தேவையான விழிப்புணர்வு.

அவர் தமது கருத்துரையில்,

1. மாற்றங்கள் மக்களை மையப் படுத்தி அமைந்துள்ளனவா?
2. மாறிவரும் காலச்சூழலில் எது முதன்மையாகத் தேவை?
3. சட்ட விழிப்புணர்வு நம்மிடம் உள்ளனவா?

குறிப்பாக

   i. அரசியில் சட்ட விழிப்புணர்வு
   ii. தகவல் பெறும் உரிமைச் சட்டம்
   iii. சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம்
   iv. பெண்கள் சார்ந்த சட்டம்
   v. மதமாற்றத் தடைச் சட்டம்

4. இளையோரில் ஏற்படுத்தப்பட வேண்டிய விழிப்புணர்வு என்ன?
5. குடும்பங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காரியங்கள் எவை?

போன்றவைக் குறித்த வினாக்களுக்கான விளக்கத்தை தமது உரையில் பதிவு செய்தார். தொடர்ந்து குழு விவாதத்திற்காக 10 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டனர். நமது மறைமாவட்டத்தின் பிரதி நிதிகளாகச் சென்ற குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், திரு. எட்வின்சன், பாலப்பள்ளம், திரு. ரமேஷ்

பள்ளிக்கோணம், திரு. சுனில்குமார் தெற்றியோடு, திரு. டைட்டஸ் நித்திரவிளை ஆகியோர் குழு விவாதத்தில் பங்குகொண்டு தத்தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

மதிய உணவைத் தொடர்ந்து குழுவிவாத அறிக்கை அவையில் குழுக்களின் செயலர்களால் பதிவு செய்யப்பட்டது.

குறிப்பாக சில ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

1. சாதி சமயம் கடந்த செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
2. இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை உருவாக்கியுள்ள தலித்குழுவிற்கு ஆக்க பூர்வ ஆலோசனைகள் வழங்குதல்.
3. மறைமாவட்டங்களுக்குட்பட்ட தலித் கிறிஸ்தவர்களின் ஆக்க பூர்வ வளர்ச்சியில் கவனம் செலுத்துதல்.
4. சாதி மறுப்பு திருமணங்களை சபை ஊக்கப்படுத்துவது.
5. கத்தோலிக்க திருமண தகவல் மையங்களில் சாதி குறித்த அறிவிப்பு இல்லாமல் செய்தல்.
6. ஞானஸ்நானம் போன்ற விழாக்களில் சாதிப் பெயர்களை தவிர்த்தல்.
7. அரசியல் விழிப்புணர்விற்காக உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்தை புனரமைத்து செயல்பட வைத்தல்.
8. இத்தகு செயல்பாடுகளை விரிவுபடுத்த மறைமாவட்ட அளவில் குழு எடுத்து செயல்படுத்துதல்.
9. இனயம் துறைமுகம் போன்ற பொது பிரச்சனைகளுக்கு ஆயர் பேரவையோடு, அருட்பணிப் பேரவையும் குரல் கொடுத்தல்.

போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

இனயம் துறைமுகம் போராட்டத்தில் ஒத்துழைத்த ஆயர் பேரவைக்கு கோட்டாறு ஆயர் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து, திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரி தயாரித்த 8 தொகுதிகள் கொண்ட திருஅவை வரலாறு புத்தகம் வெளியிடப்பட்டது.

பேரவைத் துணைத் தலைவர்களுள் ஒருவரான அருட்தந்தை வியானி அவர்களின் நன்றியுரையுடனும் இறுதி செபத் துடனும் கூட்டம் சுமார் மாலை 4.45 மணியளவில் நிறைவடைந்தது.

அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல்
செயலர், அருட்பணிப்பேரவை



# CATECHISM மறைக்கல்வி

"நாங்கள் எங்களைப் பற்றி அல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கிறோம்; அவரே ஆண்டவர் என பறைசாற்றி வருகிறோம். நாங்கள் இயேசுவின் பொருட்டு வந்த உங்கள் பணியாளர்களே" -(2 கொரி 4:5)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

**தலைமையாசிரியர்கள் கூடுகை**

மறைக்கல்வி தலைமையாசிரியர் களின் கூடுகை ஜூன் 3 அன்று நற்செய்தி நிலையத்தில் இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அவர்கள் மறைக்கல்வியின் புதிய துணை இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை ரிட்டோ அவர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றார். தொடர்ந்து கடந்த கல்வியாண்டு நிகழ்வுகள் மதிப்பீடு செய்யப்பட்டது விவிலிய வினாடி வினா, ஊக்கத்தொகை போட்டி களில் வெற்றி பெற்றவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து இக்கல்வியாண்டிற்கான கையேடு வெளியிடப்பட்டடது.

**வகுப்புகள் தொடக்கம்**

2017-18 ஆம் கல்வியாண்டு வகுப்புகள் ஜூன் 4 ஞாயிறு அன்று தொடங்கப்பட்டது.

**ஊக்குவிப்பாளர்கள் கூடுகை**

ஊக்குவிப்பாளர்கள் கூடுகை ஜூலை 1 அன்று மாலை 6.30 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் இயக்குநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. எட்வின்சன் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். முதல் ஆய்வுக்கான படிவம் வழங்கப்பட்டது. ஊக்குவிப்பாளர்களின் புதிய ஒருங்கிணைப்பாளராக திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார். கடந்த ஆண்டு ஒருங்கிணைப்பாளராக செயல்பட்ட திரு. எட்வின்சன் அவர்களுக்கு நன்றியும் புதிய ஒருங்கிணைப்பாளருக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப் பட்டது.

**வாழ்த்தும் நன்றியும்**

ஆறுகாணி, மஞ்சாலுமூடு மற்றும் தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஒருங்கிணைப்பாளர் களாக தேர்ந்தெடுக்கப்பட்ட அருட்தந்தையர்கள் டோபின் ஆலப்புரைக்கல், ஜோஸ் வயலில், மிஜோ புத்தன்புரைக்கல் மற்றும்

செயலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட அருட்சகோதரிகள் தீபா எஸ்.டி, பாவனா எப்.சி.சி அவர்களின் பணிசிறக்க வாழ்த்துகிறோம். அதுபோன்று கடந்த கல்வியாண்டில் ஆறுகாணி, மஞ்சாலுமூடு மற்றும் தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக பணியாற்றிய அருட்தந்தையர்கள் ஜோசப் தண்ணிப்பாற, எபின் பூவத்துமூட்டில், செபி மணிமலக் கண்டத்தில் மற்றும் செயலர்களாக பணியாற்றிய அருட்சகோதரிகள் மேரி ஆன் எஸ்.டி, ஜெய்சி எப்.சி.சி அவர்களுக்கும் நன்றி.

**ஆண்டுவிழா**

2016-2017 ஆம் கல்வியாண்டின் ஆண்டுவிழா ஜூலை 9 ஞாயிற்றுக்கிழமை கல்லுவிளை ஆசீர் அரங்கில் பிற்பகல் 2.30 மணியளவில் மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட நிதியாளர் பேரருட் தந்தை டென்சி, முக்கூட்டுக்கல் இளங்குருமட அதிபர் பேரருட் தந்தை ஜெஸ்டின் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இயக்குநர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்று தொடக்க உரையாற்றினார். ஊக்கு விப்பாளர் திரு. மரியதாஸ் அவர்கள் வெள்ளிவிழா கொண்டாடும் ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். பேரருட் தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் விழா நாயகர்களுக்கு பொன்னாடை அணிவித்து தலைமை யுரையாற்றினார். இடை இடையே மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. வினாடி வினா, ஊக்கத்தொகைத் தேர்வில் வெற்றி பெற்றோருக்கு பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்பட்டது. பிரிவு வாரியாக முதல் மூன்று இடங்களை பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து ஊக்குவிப்பாளர் திரு.சேம்ராஜ் அவர்கள் நன்றியுரை கூற பாப்பிறை கீதத்துடன் மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. தேநீர் விருந்தும் வழங்கப்பட்டது.

அருட்தந்தை அலெக்ஸ்,

இயக்குநர்.

**BIRTHDAYS, FEAST DAYS OF REV. FATHERS**

| BIRTHDAY | AUGUST | | FEASTDAY |
|---|---|---|---|
| Fr. Vinod Kanakalil | 04 | 28 | Fr. Tobin Alappurackal |
| Fr. Robins Kuzhikodil | 15 | 28 | Fr. Augustine Thalodil |

# YOUTH APOSTOLATE
# இளையோர் பணி

## அல்போன்சா கல்லூரியில் செபக் குழு

அல்போன்சா கல்லூரியில் பயிலும் கத்தோலிக்க மாணவ, மாணவிகள் விசுவாசத்திலும், தலைமைப் பண்பிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற சிந்தனையில் அரைநாள் கருத் தரங்கு தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஜூலை 24 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் துணை இயக்குநர் அருட்தந்தை ஜாண் அவர்களும் உடனிருந்தார். செபத்தின் முக்கியத்துவம், தலைமைத்துவப் பண்பு பற்றி குழுவிவாதங்கள் நடத்தப்பட்டன. மேலும் தங்களுக்குள் ஒவ்வொரு வாரமும் சந்தா வழி சிறு தொகை தொகை சேமித்து ஏழை மாணவர்களுக்கு உதவ தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தி வருகின்றனர். தொடர்ந்து செபக்குழு பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதன் தொடர்சியாக ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் மதியம் 12.30 மணிக்கு செபக்குழுவினர் வழிகாட்டலில் செபமாலை செபித்து வருகின்றனர்.





## இளையோர் தலைமைத்துவ முகாம்

மறைமாவட்ட அளவில் தலைசிறந்த திறமையான இளைஞர் குழுவை உருவாக்கும் முயற்சியின் பகுதியாக இளையோர்களின் ஒருநாள் கருத்தரங்கானது இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் தலைமையில் கல்லுவிளை இளைஞர் இயக்க அலுவலகத்தில் ஜூலை 9 அன்று நடைபெற்றது. தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு, பாடல் பயிற்சிகள் போன்றவை நடைபெற்றன.


இதன் தொடர்ச்சியாக ஜூலை 23 அன்று படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட அரங்கில் பயிற்சி நடைபெற்றது. 'இயேசுவின் தலைமைத்துவ பண்பு' பற்றி காணொலிக் காட்சி வாயிலாக இக்கருத்தரங்கு நடைபெற்றது. சுமார் 40 இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அடுத்தக் கருத்தரங்கு ஆகஸ்டு 25 அன்று நடைபெற உள்ளது. இதில் மறைமாவட்ட இளைஞர் குழு உருவாக்கப்பட உள்ளது.

செல்வி பபிஷா,
செயலர்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து...




அருட்சகோதரர்கள் அனைவரும் தத்தம் குருத்துவக் கல்லூரியில் நலமாக பயின்று வருகிறார்கள். திருச்சூரில் பயின்று வரும் திருத்தொண்டர் ஜெபனேஷ் அவர்களின் திருத்தொண்டுப் பயிற்சி பணி ஆகஸ்டு 31 அன்று நிறைவடையவுள்ளது. பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலுவாவில் இறையியல் பயிலும் திருத்தொண்டர் சுபின் அவர்கள் கால்பந்து ஆடும்போது கணுக்காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக சிகிட்சை பெற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். ஆயர் அவர்கள் சந்தித்து குணமடைய செபித்தார்.

சத்னா குருத்துவக் கல்லூரி தொடங்கியதன் வெள்ளிவிழா இவ்வாண்டு அக்டோபர் 3 மற்றும் 4 அன்று நடைபெற உள்ளது. ஆகவே சத்னாவில் பயிலும் அருட்சகோதரர்கள் வெள்ளிவிழா தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அருட்சகோதரர் ஷிஜோ அவர்கள் உரோமையில், உர்பானியானம் பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டப் படிப்பை முடித்து, ஜூலை 30 ஆம் தேதி மறைமாவட்டத்திற்கு திரும்பினார். அவர் தற்போது, மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் மேய்ப்புப்பணியில் உதவுகிறார்.

அருட்சகோதரர் பிரின்ஸ் அவர்கள் தங்களது குழு ஆய்வுக் கட்டுரைப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

அருட்சகோ. டோஜி,
அருட்சகோதரர் தலைவர்.



FAMILY APOSTOLATE

குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**புதிய துணை இயக்குநர்**

இல்வாழ்வு இயக்கத்தின் துணை இயக்குநராக அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் ஜூன் 4 அன்று பொறுப்பேற்றுள்ளார். இயக்குநர் தந்தை அஜீஷ் அவர்கள் தலைமையில் அலுவலகப் பணியாளர்கள் வரவேற்பு அளித்தனர்.

**மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், புதன், வியாழன் நாட்களில் காலை 10.00 மணி முதல் மதியம் 1 மணிவரை செயல்பட்டு வருகிறது. மது மற்றும் மனநோய்க்கு மருந்துகளும், ஆற்றுப்படுத்துதலும் வழங்கப்படுகின்றன. இந்நாட்களில் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

**திருமண தயாரிப்பு பயிற்சி**

திருமண தயாரிப்பு பயிற்சி ஜூலை மாதம் 14 அன்று காலை 10 மணிக்கு தொடங்கி 16அன்று மாலை 4 மணிக்கு நிறைவடைந்தன. 18 பேர் பங்கேற்றனர். நிறைவு நாளன்று மதியம் 3 மணிக்கு பயிற்சியாளர்களின் பெற்றோர்களுக்கான பயிற்சியை அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் வழிநடத்தினார். இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பயிற்சியில் பங்கேற்போர் அனுமதி கடிதம் பங்குத்தந்தையிடமிருந்து பெற்று பூர்த்தி செய்து கொண்டு வர நினைவூட்டுகிறேன்.

**மாதர் ஜோதிஸ்**

மாதர் ஜோதிஸ் ஆலோசனைக் கூட்டம் 11.07.2017 மதியம் 2.30 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. பொறுப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் கலந்து கொண்டு வளர்ச்சிப் பணிகள் குறித்து திட்டமிட்டனர். அதன் விபரம்,

*அலகுகள் மேம்படுத்துதல்

*ஆகஸ்டு மாதத்தில் மறைவட்ட தளங்களில் ஒருநாள் கருத்தரங்கு நடத்துதல்

*உறுப்பினர் பதிவுப் படிவம் அனைத்து அலகுகளும் விரைவில் திரும்ப ஒப்படைக்கவும்,

*மாதர் ஜோதிஸ் போட்டிக்கான பெயர் பட்டியல் செப்டம்பர்15 தேதிக்குள் கல்லுவிளை அலுவலத்தில் ஒப்படைக்கவும்.

*கையெழுத்து இதழ் போட்டிக்கு அக்டோபர் 30க்குள் அலகுகள் தங்கள் விபரங்களை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

விசுவாசத்தைக் குறித்த கதை, கவிதை, இலக்கியம், கட்டுரை, படங்கள், சமையல் குறிப்பு. விழிப்புணர்வு தகவல்கள் எழுதி ஒப்படைக்கலாம். மொழி தடையில்லை.

அருட்தந்தை அஜீஷ்|இயக்குநர்.

## SUCCESS 2017

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமானது தக்கலை மறைமாவட்ட பங்கு தளங்கள் மற்றும் கன்னியாகுமரி சமூக சேவைசங்கத்தின் கீழ் இயங்கி வரும் சுயஉதவி குழு மகளிரின் குழந்தைகள் 10 மற்றும் 12 வகுப்பில் 85% க்கு அதிகமான மதிப்பெண்களை பெற்று வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக SUCCESS 2017 நிகழ்வானது கல்லுவிளை கனனியாகுமரி சமூக சேவை சங்கம் அரங்கத்தில் வைத்து ஜூலை மாதம் 22 ம் தியதியன்று நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் தலைமை தாங்கினார்கள். சிறப்பு விருந்தினராக இன்பென்ட் ஜீஸஸ் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜாண் ஜோசப் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்கள் தங்களுக்கான சரியான இலக்கை அமைத்து கொண்டு அதன் வழியாக வெற்றிப்படியை எளிதாக அடைய வேண்டுமென்று சிறப்புரை யாற்றினார். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் ஆலோசகர் முனைவர் சத்தியதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இதில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பில் முதல் முன்று இடங்களில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு சிறப்பு பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது இதில் 10-ஆம் வகுப்பில் அஜிஷ் என்ற மாணவன் 496 மதிப்பெண்ணும், 12-ஆம் வகுப்பில் அஜிஷா என்ற மாணவி 1146 மதிப்பெண்ணும் பெற்று முதலிடம் பிடித்தனர். அனைத்து மாணவர்களுக்கும் ஊக்கப்பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது. 95 மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### காளான் வளர்த்தல் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் சுய






உதவி குழுக்களிலுள்ள மகளிரை தொழில் முனைவோராக உருவாக்க முதற்கட்டமாக 30 மகளிருக்கு இலவசமாக காளான் வளர்க்கும் பயிற்சியானது ஜூலை மாதம் 15, 2017 அன்று திருவனந்தபுரத்திலுள்ள விவசாய கல்லூரி வெள்ளயானியில் வைத்து நடைப்பெற்றது. இந்த பயிற்சியினை முனைவர் திருமதி லூலூதாஸ் அவர்கள் செய்முறை பயிற்சியுடன் நடத்தினார். மகளிர் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள்.

## சுழல்நிதி கடன்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமானது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொழில் தொடங்குவற்கான சுழல்நிதி கடன் உதவி திட்டத்தை தொடங்கியுள்ளது. சுய உதவி குழுவில் தையல் தெரிந்த மகளிரை அடையாளம் கண்டு கொண்டு அவர்கள் தொழில் செய்ய தையல் மிஷன் வாங்குவதற்காக சுழல்நிதிக் கடன் வழங்கப்பட்டது. இதில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 49 மகளிர் பயனடைந்தனர். இதனை கன்னியாகுமரி சமூக சேவை சங்க உதவி இயக்குநர் அருட்தந்தை வினு அவர்கள் தலைமை தாங்கி பயனாளிகளுக்கு சுழல் நிதியை வழங்கினார்.





## நிதிநிறுவனத்தின் வருகை

“மானோஸ் யுனிதாஸ்” நிதி நிறுவனமானது கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணித் தளங்களுக்குட்பட்ட பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்சிக்கான திட்டத்திற்கு நிதியுதவி அளித்துள்ளது. இவர்களின் உதவியால் பழங்குடி மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை நேரடியாக பார்வையிடுவதற்காக மானோஸ் யுனிதாஸ் நிதிநிறுவனத்தை சார்ந்த பிரதிநிதிகளான மெர்சிடஸ் மற்றும் பெட்லீஜீசியா ஜூலை 12, 2017 அன்று கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்திற்கு வருகை புரிந்தார்கள். அவர்களை துணைஇயக்குநர் தந்தை வினு ஜோசப் அவர்கள் வரவேற்றார்கள். இவர்கள் பயனாளிகளை நேரடியாக அவருடைய இல்லங்களில் சென்று சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி தங்கள் திட்டத்தின் வழியாக பழங்குடி மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை பற்றி தெரிந்து கொண்டார்கள்.

அருட்தந்தை சஜி |இயக்குநர்




# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

**திட்ட கடனுதவி வழங்குதல்**

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் அருட்தந்தை லின்ஸ்லால் அவர்கள் வழிகாட்டலில் செயல்படும் கிளைச்சபை சார்பில் திட்ட கடனுதவி வழங்கும் நிகழ்வு அருட்தந்தை சுதீஸ் அவர்கள் தலைமையில் 22.07.2017 அன்று நடைபெற்றது. அருட்தந்தை சுதீஷ் அவர்கள் திட்ட உதவி வழங்கினார். மத்திய சபை திட்ட கண்காணிப்பாளர் சகோ. ஷிபு மோன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். கிளைச்சபைத் தலைவர் சகோ. செல்வராஜ் அவர்கள் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார். வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் அவர்களும் உடனிருந்தார்.

சகோ. ஷாஜன்,

செய்தித்தொடர்பாளர்.

---

## இதரச் செய்திகள்

**OMMI பொன்விழா**

மறைமாவட்டத்தில் நெடுங் காலமாக அருட்பணி மேற்கொண்டு வரும் OMMI அருட்சகோதரிகள் தங்கள் சபை நிறுவனத்தின் பொன்விழாவை, ஜூன் 30 அன்று கோட்டயம், தெள்ளகத்தில் வைத்துக் கொண்டாடினார்கள்.

**டி.என்.என்.(DNN)**

காரோடு, (டி.என்.என்.) தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தின் விரிவாக்க கட்டிடப் பணியானது நடைபெற்று வருகிறது.

**அருட்சகோதரி ஏலியாம்மா SDS மறைவு**

அருட்சகோதரி ஏலியாம்மா SDS அவர்கள் ஜூலை 27, 2017 அன்று திருவனந்தபுரம் RCC ஆஸ்பத்திரியில் வைத்து இறையடி சேர்ந்தார். இவர், ஆயர் இல்லத்தில் 9 ஆண்டுகள் தன்னலமற்ற சேவை புரிந்தார். எளிய மனநிலையுடன் புன்முறுவலுடன் சேவை செய்த அவர் எல்லாராலும் பெரிதும் மதிக்கப்பட்டார். அவருடைய இறுதிச் சடங்கானது, மஞ்சாலுமூடு SDS கன்னியர் இல்லத்தில் வைத்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# <u>வெள்ளிவிழா அருட்சகோதரிகள்...</u>

பெயர் : அருட்சகோதரி **ரூபி றோஸ்** CMC
இயற்பெயர் : றோசம்மா ஆன்றனி
தந்தை பெயர் : சகரியா ஆன்றனி
தாய் பெயர் : சாரம்மா
வீட்டு பெயர் : வரவுகாலாயில்
பிறந்த தேதி : 25.05.1966
மறைமாவட்டம் : சங்ஙனாச்சேரி
பங்கு : வில்லூந்நி
முதல் வார்த்தைப்பாடு : 14.04.1993
நித்திய வார்த்தைப்பாடு: 02.05.1998
கல்வி : பி.எஸ்ஸி, பி.எட்
இறைபணி : ஆசிரியர்



---

பெயர் : அருட்சகோதரி **அனிஜா** CMC
இயற்பெயர் : பெற்றி மோள் ஜேக்கப்
தந்தை பெயர் : உலன்னான் சாக்கோ
தாய் பெயர் : எலம்மா
வீட்டு பெயர் : கரிப்புங்கம்புறம்
பிறந்த தேதி : 11.06.1971
மறைமாவட்டம் : சங்ஙனாச்சேரி
பங்கு : வில்லூந்நி
முதல் வார்த்தைப்பாடு : 14.04.1993
நித்திய வார்த்தைப்பாடு: 28.12.1998
கல்வி : பி.எ, பி.எட்
இறைபணி : ஆசிரியர் (யு.எஸ்.ஏ)



---

பெயர் : அருட்சகோதரி **ஜெசி தெரஸ்** CMC
இயற்பெயர் : ஜேசம்மா மேத்யு
தந்தை பெயர் : ஜோசப் மேத்யூ
தாய் பெயர் : அன்னம்மா
வீட்டு பெயர் : செம்பில்பறம்பில்
முகவரி : மாங்கொம்பு, ஆலப்பி
பிறந்த தேதி : 13.09.1971
மறைமாவட்டம் : சங்ஙனாச்சேரி
பங்கு : புளிங்குந்நு



| | | |
|---|---|---|
| முதல் வார்த்தைப்பாடு | : | 14.04.1993 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 28.12.1998 |
| கல்வி | : | எம்.எஸ்சி, பி.எட், எம்.பில் |
| பணி | : | ஆசிரியர் |

---



| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரி **டெயிஸ் மரியா** CMC |
| இயற்பெயர் | : | ஜாலி மேத்யூ |
| தந்தை பெயர் | : | சி.சி மேத்யூ |
| தாய் பெயர் | : | அச்சம்மா |
| வீட்டு பெயர் | : | செம்மாளம் |
| முகவரி | : | மாமூடு, சங்ஙனாச்சேரி |
| பிறந்த தேதி | : | 11.05.1972 |
| மறைமாவட்டம் | : | சங்ஙனாச்சேரி |
| பங்கு | : | மாமூடு |
| முதல் வார்த்தைப்பாடு | : | 14.04.1993 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 02.05.1998 |
| கல்வி | : | பி.ஏ, பி.எட், எம்.ஏ |

---



| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரி **அல்போன்ஸ் லினட்** CMC |
| இயற்பெயர் | : | லீனா செபஸ்டியா |
| தந்தை பெயர் | : | செபாஸ்டின் |
| தாய் பெயர் | : | கத்ரினம்மா |
| வீட்டு பெயர் | : | குற்றிகாட்டில் |
| முகவரி | : | அதிரம்புழ, கோட்டக்கப்புறம் |
| பிறந்த தேதி | : | 28.07.1971 |
| மறைமாவட்டம் | : | சங்ஙனாச்சேரி |
| பங்கு | : | கோட்டக்கப்புறம் |
| முதல் வார்த்தைப்பாடு | : | 14.04.1993 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 02.05.1998 |
| கல்வி | : | எம்.எஸ்.டபிள்யூ, பி.எட், எம்.பில் |
| பணி | : | ஆசிரியர் |

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரி **ஜொஸீனா** FCC<br>மரிய சதேன் எப்.சி. கன்னியர்இல்லம்,<br>தெற்றியோடு, களியக்காவிளை |
| வீட்டு பெயர் | : | குற்றிகாட்டில் |
| முகவரி | : | குறிச்சி, சங்ஙனாச்சேரி |
| பிறந்த தேதி | : | 09.01.1967 |
| மறைமாவட்டம் | : | சங்ஙனாச்சேரி |
| பங்கு | : | குறிச்சி |
| முதல் வார்த்தைப்பாடு | : | 12.11.1992 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 27.05.1998 |
| பெயர்கொண்ட நாள் | : | மார்ச் 19 |
| பணி | : | சிறப்பு ஆசிரியர், மறைக்கல்வி<br>ஆசிரியர் அதங்கோடு |



---

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரி **டெய்சி தெரேஸ்** SJSM<br>புனித ஜோசப் கன்னியர் இல்லம்,<br>ஆனையடி |
| பிறந்த தேதி | : | 04.04.1972 |
| முதல் வார்த்தைப்பாடு | : | 07.12.1992 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 27.11.1999 |
| பெயர்கொண்ட நாள் | : | அக்டோபர் 15 |
| பணி | : | ஆசிரியர், சான்ஜோ ஆங்கிலப்பள்ளி,<br>ஆனையடி |



---

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்சகோதரி **அன்ஸா ஜோசப்** SJSM<br>புனித ஜோசப் கன்னியர் இல்லம்,<br>ஆனையடி |
| வீட்டு பெயர் | : | குற்றிகாட்டில் |
| முகவரி | : | கைனகிரி, சங்ஙனாச்சேரி |
| பிறந்த தேதி | : | 27.04.1973 |
| மறைமாவட்டம் | : | சங்ஙனாச்சேரி |
| பங்கு | : | கைனகிரி |
| முதல் வார்த்தைப்பாடு | : | 07.12.1992 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 27.11.1999 |
| பெயர்கொண்ட நாள் | : | ஜுலை 26 |
| பணி | : | கன்னியர் தலைவி, ஆனையடி |



# பொன்விழாவில்...

பெயர் : அருட்சகோதரி **கொன்சீலியா மந்தர** SH
திரு இருதய கன்னியர் இல்லம், மாறப்பாடி



மறைமாவட்டம் : சங்஡னாச்சேரி
பங்கு : கொளுவானல்
முதல் வார்த்தைப்பாடு : 20.04.1968

தக்கலை மறைமாவட்டத்தில் அதிக ஆண்டுகள் பணியாற்றிய இவர் நீண்டகாலமாக முக்கூட்டுக்கல் மாணவர் காப்பகத்தின் பொறுப்பாளராகவும், மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். .

---

பெயர் : அருட்சகோதரி **மார்கிரேட் கவியில்** SH
திருச்சிலுவை கன்னியர் இல்லம், செங்கோட்டை



முகவரி : கொற்றியாமம், கொல்லம்
மறைமாவட்டம் : கொல்லம்
முதல் வார்த்தைப்பாடு : 1968

மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் பொறுப்பாளராகவும், இல்லத் தலைவியாகவும் பணியாற்றிய இவர், தற்போது செங்கோட்டையின் மேக்கரை திருத்தொண்டுத் தளத்தில் இறைபணியாற்றி வருகிறார்.

அருட்தந்தை **டேவிஸ் கருகப்பள்ளி** அவர்கள் சி.எம்.ஐ துறவற சபையை சார்ந்தவர். இவர் 19.03.1992 அன்று துறவற வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டவர். தற்போது களியல் புனித மரியன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையாக பணியாற்றி வருகிறார்.



அருட்தந்தை **தங்கச்சன் கொல்லப்பள்ளியில்** அவர்கள் சலேசியன் துறவற சபையை சார்ந்தவர். இவர் 24.05.1992 அன்று துறவற வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டவர். தற்போது மறைமாவட்ட புரக்கூராக பணியாற்றி வருகிறார்.






# மறைமாவட்ட செய்திகளும் நிகழ்வுகளும்

**புனித அல்போன்சா திருத்தலத் திருவிழா**

சீரோ மலபார்த் திருச்சபையின் புனிதையும் இந்தியாவின் முதல் புனிதையுமான புனித அல் போன்சாவை பாதுகாவலியாகக் கொண்டத் திருத்தலம் ஒன்றை, நம்முடைய மறைமாவட்டத்தில் நாகர்கோவிலில் கொண்டுள்ளோம். பத்து நாட்கள் நடைபெற்ற இத்திருவிழா நாட்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றார்கள். ஜூலை 29 ஆம் தேதி நடந்த நடைபயணத்தின் போது, மறைமாவட்டத்தைச் சார்ந்த பல அருட்தந்தையரும் அருட் சகோதரிகளும் பொதுநிலையினரும் கால்நடையாக திருத்தலம் நோக்கி விடியற்காலையிலேயே புறப்பட்டுச் சென்றார்கள். மேலும், விழாவின் கடைசி நாளான ஜூலை 30 ஆம் தேதி மறைமாவட்ட புனிதப்பயண நாளாக அனுசரிக்கப்பட்டது. ஏராளமான மக்கள், அன்றைய தினம் திருத்தலம் வந்தடைந்து, தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுத்தத் திருப்பலியில் பங்கேற்றார்கள்.

**சங்கமம் – கூடுதல் கட்டிடம் மந்திரிப்பு**

ஜூலை 18. 2017 அன்று தக்கலை சங்கமத்தின் விரிவாக்கக் கட்டிடத்தின் மந்திரிப்பு செவ்வாய் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

**தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவை**

தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையின் (TNBC) கோடை கால அமர்வானது ஜூன் 9 முதல் 11 வரை வேளாங்கண்ணியில் வைத்து நடைபெற்றது. ஜூலை 9 ஆம் தேதி ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் தக்கலை மறைமாவட்ட அருட்பணிப் பேரவையின் சார்பில் ஓரிரு பிரதிநிதிகளும் பங்கேற்றார்கள். மாதா தொலைக்காட்சியை பிரபலப்படுத்தவும் உதவும் வேண்டுமென்று கூறியதோடு, இனையத்தில் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ள துறைமுகத்திற்கான எதிர்ப்பை பதிவு செய்யவும் சிறப்பாக நம்மிடம் கேட்கப்பட்டன.

**புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

இவ்வாண்டு, வணிகவியல், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியத் துறைகளில் முதுகலை பட்டப்படிப்பானது அறிமுகப் படுத்தப்பட்டது. மேலும், இவ்வாண்டில் 150 மாணவர்கள் தங்களது இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தார் என்பது, கல்லூரியைப் பொறுத்தவரைக்கும்

முக்கியமான நிகழ்வாகக் கொள்ளலாம். இவ்வாண்டு 240 மாணவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பிற்காக புதிதாக சேர்ந்துள்ளார்கள்.

ஜூலை 19 ஆம் தேதி கல்லூரியில் பணியாற்றும் ஊழியர்களுக்கான சிறப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. அன்றைய தினம் அவர்கள் குடும்பமாக வந்து மாலை நேரத்தை மிகவும் மகிழ்வுடன் கழித்தனர்.

**மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம்**

ஜூலை 13 ஆம் தேதி, சங்ஙனாச்சேரி, காஞ்ஞிரப்பள்ளி, பாலா மற்றும் தக்கலை மறை மாவட்டத்தைச் சேர்ந்த கூரியா உறுப்பினர்களும், இயக்கங்களின் இயக்குநர்களும் கலந்து கொள்ளும் கூட்டமானது சங்ஙனாசேரி ஆயர் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. கேரளாவில் நிலவும் கல்வி அமைப்புக் குறித்த விவாதம் குறிப்பாக நடைபெற்றது.

**தமிழக உதவி இயக்குநர்**

அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தமிழ்நாடு மிஷன் லீக் இயக்கத்தின் உதவி இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**ஆசிய இளையோர் தினம்**

அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இந்தோனேஷியாவில் நடைபெறும் ஆசிய இளையோர் தினத்தில் (AYD) பங்கேற்பதற்காக சென்றுள்ளார். அந்நிகழ்வானது ஆகஸ்ட் 7 அன்று முடிவடையும்.

ஜூலை 15 ஆம் தேதி நடத்துவதாக தீர்மானித்திருந்த தக்கலை அருட்பணிப் பேரவையின் கூட்டமானது அரசு வேலை நாளாக இருந்ததால் மாற்றிவைக்கப்பட வேண்டியதாயிற்று.

**லயோலா கல்லூரியில்**

அருட்தந்தை எபின் பூவத்து மூட்டில் அவர்கள், எம்.எஸ். டபிள்யூ பட்டப்படிப்பை, சென்னை லயோலா கல்லூரியில் மேற் கொள்கிறார். அவர், முகப்பேறு என்னும் இடத்தில் அமைந்துள்ள சீரோ மலபார் ஆலயத்தில் தங்குகிறார்.

**மறைமாவட்டப்பணியில்**

உரோமையில் படிப்பை முடித்த அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள், ஜூலை 31 அன்று மறைமாவட்டத்திற்கு திரும்பினார். அவர் மறைமாவட்டப்பணிகளை செப்டம்பர் மாதத்திலிருந்து தொடங்குவார்.

**அருட்தந்தையர்களுக்கான ஆண்டு தியானம்**

அருட்தந்தையர்களுக்கான ஆண்டு தியானம் அக்டோபர் 15 முதல் 19 வரை தக்கலை சங்கமத்தில் நடைபெற உள்ளது. அருட்தந்தை ஜோசப் பாம்பழனி அவர்கள் தியானத்தை வழிநடத்துவார்.




# மறைவட்ட செய்திகள்

## செங்கோட்டைச் செய்திகள்

### ஆயர் சந்திப்பு

செங்கோட்டை திருத்தொண்டுதள அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் கூடுகை 30.05.2017 அன்று வாஞ்சி சி.எம்.சி கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது. புதிதாக பணியாற்ற வந்த அருட்தந்தையர்கள் ராஜேஷ் எம்.சி.பி.எஸ், செபி மற்றும் அருட்சகோதரிகள் ஜெசிந்தா டி.எச்.எஸ், சுசீலா டி.எச்.எஸ், புஷ்பலதா எச்.சி மற்றும் அருட்சகோதரர் ஜோயிஸ் எம்.சி.பி.எஸ் ஆகியோர்களை ஆயர் அவர்கள் வரவேற்றார். தொடர்ந்து மறைபரப்புதள செயல்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டன. செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் புதிய ஒருங்கிணைப்பாளராக அருட்தந்தை ஜாண்பால் அவர்களை ஆயர் அவர்கள் நியமித்தார்.

### மறைபரப்புப் பணியாளர்கள் சந்திப்பு

திருஇருதய திருநாளை முன்னிட்டு டொரோத்தியன் கன்னியர் மடத்தில் அனைத்து மறைபணியாளர்களும் ஒன்றுகூடி ஆராதனை மற்றும் ஒப்புரவு திருநிகழ்வில் பங்கேற்றனர். தொடர்ந்து புதியதாக பணியாற்ற வந்த டொரேத்தியன் அருட்சகோதரிகளை ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் வரவேற்று திருநாள் வாழ்த்துக்களை கூறினார். பின் பக்த இயக்கங்களில் பணியாற்றுவதற்கு பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

### மருத்துவ சேவை மையம்

செங்கோட்டை மறைபரப்புதள மருத்துவ சேவை மையமான புனித தோமையார் கிளினிக்கில் புனித தோமையார் திருநாள் ஜூலை 1 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அருட்தந்தை ஜாண்பால் மற்றும் அருட்தந்தை செபி அவர்கள் தலைமையில் திருச்சபையின் வளர்ச்சி, தோமையார் வரலாறு, மத, இன ஒற்றுமை பற்றிய கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப் பட்டன. நிறைவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

### புனித தோமையார் ஆலயத் திருவிழா

புதூர் புனித தோமையார் ஆலயத் திருவிழா 30.06.2017 முதல் 02.07.2017 வரை 3 நாட்கள் சிறப்பாக நடைபெற்றன. 7 பேருக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டன. நிறைவு நாளன்று அருட்தந்தை செபி அவர்கள் தலைமையில் இராசைத் திருப்பலி நடைபெற்றது.

பின் கடந்த 11 ஆண்டுகளாக பணியாற்றிய அருட்சகோதரி எமிலி அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி பிரியாவிடை கொடுத்தனர். தொடர்ந்து திருக்கொடியிறக்கப்பட்டு அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது.

## சூசைபுரம் மறைவட்டம்

### ஆலயத் திருவிழா

**மாதாபுரம் புனித தோமையார் ஆலயத் திருவிழா** ஜூலை 3 ஆம் நாளான துக்ரான திருநாளன்று நடைபெற்றது. திருவிழா நாட்களில் நற்சய்தி பகிர்வு, திருப்பலி, அன்பின் விருந்து ஆகியன நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்தந்தை ஜாண் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

**மாங்கரை புனித வியாகப்பர் ஆலய திருவிழா** ஜுலை மாதம் 10 நாட்கள் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. நிறைவு நாளான ஜூலை 25 ஆம் நாள் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்.

### கட்டிட மந்திரிப்பு

மாங்கரை புனித வியாகப்பர் ஆலய பங்குத்தந்தை இல்லம் புதுப்பிக்கப்பட்டு ஜூலை 3 ஆம் நாள் பங்குத் தந்தை அருட்தந்தை அலெக்ஸ் அவர்களால் மந்திரிக்கப்பட்டது.

### ஆயரின் அதிகார ஆய்வு

16.07.2017 ஞாயிறு பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஆயரின் அதிகார ஆய்வு (*Pastorl Visit*) நடைபெற்றது. காலை 7.30 மணிக்கு ஆயர் அவர்களுக்கு கும்ப ஆரத்தி வரவேற்பு வழங்கப்பட, திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்கள் சந்திப்பும், பொது ஆராதனையும் நடைபெற்றது. மேலும் கன்னியர் இல்லம், ஆனக்குழி கட்டிடம், படுக்கை நோயாளிகள் சந்திப்பு, குருசடி, கல்லறைதோட்டம் பார்வை யிடப்பட்டு இறந்தோருக்கான வழிபாடும் நடைபெற்றது. மதியம் அன்பின் விருந்தோடு மாலை 6 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

### மும்மாத இதழ் வெளியீடு

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் சார்பில் மூன்று மாதத்திற்கொருமுறை வெளிவர இருக்கும் இராஜதூது என்னும் இதழை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வெளியிட்டு தொடங்கி வைத்தார். முதல் இதழை பங்குத்தந்தை அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித அல்போன்சா திருவிழா

புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறையில் புனித அல்போன் சாவின் திருநாளை ஒட்டி ஒன்பது நாட்கள் 20.7.2017 முதல் 28.7.2017 வரை சிறப்புத் திருப்பலியும், நவநாளும் நடைபெற்றன. அல்போன்சா திருநாளான ஜூலை 28 அன்று இனிப்பும் வழங்கப்பட்டன. ஜூலை 26

அன்று அன்னை மரியாவின் பெற்றோர்களாகிய அன்னா, யோவாக்கீம் என்பவர்களின் திருநாள் கொண்டாடப்பட்டு 28 அன்று பங்கிலுள்ள முதியோர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும்** புனித அல்போன்சா திருநாள் 9 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டன.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### ஆலயத் திருவிழா

**மாறப்பாடி புனித தோமையார் ஆலய திருவிழா** 30.06.2017 முதல் 04.07.2017 வரை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜோமோன் அவர்கள் கொடியேற்றி தொடங்கி வைத்தார். அனுதினமும் செப மாலை, புகழ்மாலை, திருப்பலி ஆகியவை நடைபெற்றன. இரண் டாம் நாளன்று செபமாலைப் பவனி நடைபெற்றது. மூன்றாம் நாளான ஞாயிறன்று காலை 10 மணிக்கு குருகுல முதல்வர் அவர்கள் திருமுழுக்கு, திருவிருந்து, உறுதிபூசுதல் அரு ளடையாளங்களை வழங்கினார். நான்காம் நாளன்று இராசைத் திருப்பலியும், ஐந்தாம் நாளன்று இறந்தோருக்கான நினைவுத் திருப்பலியும் நடைபெற்றன.

**பென்கிரி புனித பெனடிக்ட் ஆலயத் திருவிழா** 05.07.2017 அன்று பங்குத்தந்தை அருட்தந்தை ஷோஜி அவர்கள் தலைமையில் திருக்கொடியேற்றலுடன் ஆரம்பமானது. செபமாலை, புகழ்மாலை மற்றும் திருப்பலியுடன் முதல் மூன்று நாட்கள் தியானமும் நடைபெற்றது. நான்காம் நாளன்று மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும், நிறைவு நாளன்று அருட்தந்தை ஜேம்ஸ் பன்னாங்குழி அவர்கள் தலைமையில் இராசைத் திருப்பலியும் நடைபெற்றன.

### முழுக்கோடு ஆலய பொன் விழா

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தின் பொன் விழா கொண்டாட்டங்களின் தொடக்க மானது ஜூலை 2, 2017 அன்று நடத்தப்பட்டது. அன்றைய தினம் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில், முழுக்கோடு பங்குதளம் உருவாக காரணமாக இருந்த அருட்தந் தையர்கள் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்காக செபிக்கப்பட்டது.

### பொன்விழா

களியல் புனித மரியா ஆலய பொன்விழா கொண்டாட்டமானது அக்டோபர் 15 ஆம் தேதி நடைபெறும். புதுப்பிக்கப்பட்ட ஆலய கட்டிட அர்ச்சிப்பு அக்டோபர் 7, 2017 அன்று நடைபெறும்.

தகவல் சேகரிப்பு: திருமதி.ஹேமா/ சினேக லதா/செலின் மேரி


## BISHOP'S ENGAGEMENTS AUGUST 2017

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| **1** | Tue | 03.00pm | Soosaipuram: College Staff meeting<br>Parish visit: Thettiyode |
| 2 | Wed | 05.00pm | Bp's House<br>wParish visit: Arukani & Anamugam |
| 3 | Thu | 06.00pm | Bishop's House: Memorial Qurbana |
| 4 | Fri | 10.00am<br>06.00pm | St. Maria Vianney Day Mukkootukal >><br>Kallikulam, Valliyoor: Vespers |
| 5 | Sat | 05.30am | Valliyoor: Feast Day Qurbana |
| 6 | Sun | 06.00pm | Paramanvilai: Holy Qurbana |
| 7 | Mon | 05.00pm | Bp's House \|Parish visit: Christurajapuram |
| 8 | Tue | 05.00pm | Bishop's House\| Parish visit: Mezhacode |
| 9 | Wed | 09.30am | Curia Meeting\| Parish visit: Mukkoottukal |
| 10 | Thu | 10.30am | Meeting with MMM Provincial\| Parish visit: Killiyoor |
| 11 | Fri | 02.30pm | Bp's House: Interdepartmental Meeting |
| 12 | Sat | | Pala, Marangattupalli: Jubilee Celebration |
| 13 | Sun | 07.00am | Soosaipuram: Pastoral Visit |
| 14 | Mon | 10.00am<br>06.00pm | Priests & Religious Sangamam at Nagercoil<br>Nithiravilai: Feast Day Qurbana |
| 15 | Tue | 05.00pm | Chinnamuttam: Feast Mass |
| 16 | Wed | 06.00pm | Pilankarai: Feast Day Qurbana |
| 17 | Thu | 11.00am | Manavalakurichy: Marriage Qurbana |
| 18 | Fri | 06.00pm | Kaliakkavilai: Eucharistic Procession |
| 19 | Sat | 06.00pm | Shenkottai: Feast Day Qurbana |
| 20 | Sun | 09.00am<br>02.00pm | Anamugam: Feast Day Qurbana<br>Nagercoil: Alphonsa Academy |
| 21-31 | Mon | | Syro-Malabar Synod |

**Fr. Thomas Sathianesan**
Eparchial Chancellor



St. Thomas Day Celebration at Seminary - July 03



Sangamam Renovated Building Blessing - July 18



Pulari School Nursery Class Blessing - July 28



Alphonsa Feast - July 30, 2017



Funeral of Sr. Alieyamma SDS

For Private Circulation Only
IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570